تاميلي

தமிழ்

معهد السنة
As-Sunnah College

MahadSunnah

# زكاة الفطر

# ஸகாதுல் ஃபித்ர் (பெருநாள் தர்மம்)


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

*www.alsarhaan.com*

WWW.MAHADSUNNAH.COM

# ஸகாதுல் ஃபித்ர் (பெருநாள் தர்மம்)

**நீங்கள் நோற்ற நோன்புகளில் உள்ள குறைகளை நீக்கி, அவற்றைப் பரிசுத்தப்படுத்த விரும்புகிறீர்களா? உங்களைப் போன்று ஏழைகளும் பெருநாள் தினத்தை மகிழ்ச்சியாக கழிக்க உங்களால் ஏதும் செய்ய முடியுமா என ஆசைப்படுகிறீர்களா?**

ஆம்! மேற்படி இரண்டு கேள்விகளுக்குமான பதிலை பின்வரும் ஹதீஸ் தருகிறது :

"நோன்பாளியின் நோன்பை பரிசுத்தப்படுத்தவும், ஏழைகளுக்கான (பெருநாள்) உணவாகவும் நபியவர்கள் ஸகாதுல் ஃபித்ர் என்ற பெருநாள் தர்மத்தை கடமையாக்கினார்கள்" என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (அபூதாவூத்:1609)

## இதை யார் வழங்க வேண்டும்?

பெருநாள் தினத்தில் தானும், தனது குடும்பத்தாரும் சாப்பிடுவதற்கு போதுமான அளவை விட மேலதிகமாகப் பெற்றிருக்கும் ஒவ்வொரு குடும்பத் தலைவரும் கொடுக்க வேண்டும்.

## யாருக்காக கொடுக்க வேண்டும்?

தனக்காகவும், தனது செலவில் தங்கியிருப்போருக்காகவும் (உ+ம்) : மனைவி, பிள்ளைகள்) இந்த தர்மம் வழங்கப்பட வேண்டும்.

இக்கடமையை நிறைவேற்றுவதற்கு ஒருவர் தனது பொருளாதாரத்தில் குறிப்பிட்டதொரு அளவை அல்லது குறிப்பிட்டதொரு தொகையை (நிஸாப்) அடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை எதுவுமில்லை.

## கொடுக்கப்பட வேண்டிய பொருள் என்ன?

ஒரு பிரதேசத்தில் பிரதான உணவாக உட்கொள்ளப்படக்கூடிய உணவுப் பொருள். (உ-ம்: அரிசி, கோதுமை).

## கொடுக்கப்பட வேண்டிய அளவு என்ன?

இரு கைகளாலும் நான்கு தடவைகள் அள்ளியெடுக்கும் அளவு (ஒரு ஸாஉ) கொடுக்கப்பட வேண்டும்.

நபியவர்கள் காலத்தில் பிரதான உணவுகளாக காணப்பட்ட பேரீத்தம்பழம், கோதுமை போன்றவற்றை ஸகாதுல் ஃபித்ராக ஏழைகளுக்கு வழங்குமாறு ஆண்கள், பெண்கள், சுதந்திரவான்கள், அடிமைகள், சிறியவர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் நபிகளார் கட்டளையிட்டார்கள் என இப்னு உமர் (ரழி) கூறுகிறார்கள்.

### எப்போது கொடுக்க வேண்டும்?

பெருநாள் பிறை தென்பட்டதிலிருந்து மறுநாள் பெருநாள் தொழுகைக்கு செல்வதற்கு முன் கொடுக்கப்பட வேண்டும். பெருநாள் தினத்திற்கு ஒருநாள் அல்லது இரு நாட்கள் முன்னதாக வழங்கினாலும் குற்றமில்லை. ஆயினும் பெருநாள் தொழுகைக்கு பின்னர் கொடுப்பது கூடாது. தகுந்த காரணமின்றி ஒருவர் பெருநாள் தொழுகைக்கு பின்னர் கொடுப்பது குற்றமாகும். இருப்பினும் அதை பெருநாள் தொழுகையின் பின்னரேனும் கொடுத்து குற்றத்திலிருந்து விடுபட்டு விட வேண்டும்.

### அல்லாஹ் கூறுகிறான் :

**வியாபாரமும், நட்புறவுகளும், பரிந்துரைகளும் இல்லாத அந்த (இறுதித் தீர்ப்பு) நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழிகளில்) செலவு செய்யுங்கள். (2:254)**